தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 218 | 4 Pages | 7.3.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 218 | 4 பக்கங்கள் | 7.3.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்**
**புன்மை தெரிவா ரகத்து**

**விளக்கம்:**
**கொலைத்தொழிலினராகிய மக்கள் அதன் இழிவை ஆராய்ந்தவரிடத்தில் புலைத்தொழிலுடையவராய்த் தாழ்ந்து தோன்றுவர்.**

## பீகார் தேர்தலுக்கு பிறகு நிதிஷ்குமார் அணி மாறுவார்பிரசாந்த் கிஷோர் கணிப்பு




பாட்னா, மார்ச்.7

பீகார் மாநிலம் மேற்கு சம்பரன் மாவட்டத்தில் ஜன் சுராஜ் கட்சி தலைவர் பிரசாந்த் கிஷோர் நிருபர்களுக்கு பேட்டிஅளித்தார்.அவர்கூறியதாவது:பீகார்முதல்மந்திரி நிதிஷ்குமார், உடல்அளவில்களைத்துப்போய்விட்டார். மனதளவில்ஓய்வுபெற்றுவிட்டார்.அவரதுமந்திரிகளின் பெயர்களைக் கூட அவரால் சொந்தமாக சொல்ல முடியாது.

நிதிஷ்குமார் மீது மக்களுக்கு அதிருப்தி நிலவுகிறது. அதனால் அவரை முதல்மந்திரி வேட்பாளராக அறிவிக்க பா.ஜனதா தயங்குகிறது. அவரை முதல்மந்திரி வேட்பாளராக அறிவிக்க முடியுமா என்று பிரதமருக்கும், அமித்ஷாவுக்கும் சவால் விடுக்கிறேன். இந்த ஆண்டு நடக்கும் சட்டசபை தேர்தலில் நிதிஷ்குமார் பா.ஜனதா கூட்டணியில் சேர்ந்து போட்டியிடுவார். ஆனால், தேர்தலுக்கு பிறகு முதல்மந்திரி பதவியை எதிர்பார்த்து அணி மாறிவிடுவார்" இவ்வாறு அவர் கூறினார்.

## இந்தி பேசும் மாநிலங்களில் 90 சதவீதம் பேருக்கு வேறு மொழி தெரியாது: ஆய்வில் தகவல்



புதுடெல்லி, மார்ச். 7

தாய்மொழியுடன் ஆங்கில கல்வி பெற்றவர்களின் வாழக்கை தரம் மேம்பட்டுள்ளதாக நெதர்லாந்தைச் சேர்ந்த ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தியை விட நடைமுறை பயன்கள் அதிகம் உள்ள ஆங்கிலம், இந்தியாவின் இணைப்பு மொழியாக நீடிக்கலாம் என்றும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்தை சேர்ந்த குளோபல் டேட்டா லேப் (Global Data Lab) என்னும் நிறுவனம், மொழிகள் தொடர்பான ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், இந்தி பேசாத மாநிலங்களை சேர்ந்தவர்கள் கூடுதல் மொழிகளைக் கற்க அதிக விருப்பம் உள்ளவர்களாக இருப்பதாகவும், அதே நேரத்தில் இந்தி பேசுபவர்கள் கூடுதல் மொழியை கற்பதில் ஆர்வம் இல்லாதவர்களாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1991ல் தமிழ்நாட்டில் 14.5 சதவீத மக்கள் தமிழுடன் கூடுதலாக ஒரு மொழியை பேசுபவர்களாக இருந்தனர் என்றும், இது 2011ல் 22 சதவீதமாக அதிகரித்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல ஒடிசாவில், ஒடியா மொழியை மட்டும் பேசுபவர்களின் விகிதம் 86 சதவீத்தில் இருந்து 74.5 சதவீதமாக குறைந்தது என்றும் ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் இந்தி பேசும் மாநிலங்களில் ஒரு மொழியை மட்டும் பேசுபவர்களின் விகிதம் அதிகரித்துள்ளதாகவும் உதாரணத்திற்கு 1991ம் ஆண்டு பீகாரில் 90.2 சதவீதம் பேர் இந்தியை மட்டும் பேசுவதாக இருந்தனர் என்றும் 2011ல் இது 95.2 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் கூறப்பட்டுள்ள்ளது.

ராஜஸ்தான், உ.பி. இமாச்சலப் பிரதேச மாநிலங்களில் இந்தி பேசும் மக்கள் பிற மொழிகளை கற்பதில் ஆர்வம் காட்டுவதில்லை என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களின் மொழி தேர்வுகளை மீண்டும் ஆய்வு செய்ததில், இந்தி பேசாத மாநிலங்கள் 2வது மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் குறிப்பாக தமிழ்நாட்டில், தமிழுடன், ஆங்கிலமும் தெரிந்தவர்களின் விகிதம் 1991ல்13.5சதவீதமாகவும், 2011ல்இது18.5சதவீதமாகவும்உயர்ந்துள்ளதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யமுனை நதியில் 1,300 டன் கழிவுகள் அகற்றம்; படகில் சென்று டெல்லி மந்திரி ஆய்வு





புதுடெல்லி, மார்ச். 7

டெல்லியின் நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டுத் துறை மந்திரி பர்வேஷ் வெர்மா, நேற்று படகில் சென்றபடி யமுனா நதியை ஆய்வு செய்தார். டெல்லி சட்டசபை தேர்தலின்போது யமுனையை சுத்தப்படுத்துவோம் என்று பா.ஜனதா தரப்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டு இருந்தது. பா.ஜனதா அரசு பதவியேற்ற பின்பு வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இந்த ஆய்வுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் மந்திரி கூறுகையில், "கடந்த 2023ம் ஆண்டு டெல்லியில் வெள்ளப் பெருக்கால் பாதிப்பு ஏற்பட்டது. தற்போது நதியும், வெள்ளப்பாதை அடைப்புகளும் துப்புரவு செய்து சீர்செய்யப்பட்டு உள்ளதால் எதிர்காலத்தில் வெள்ளச்சேதம் தவிர்க்கப்படும்.

கடந்த 10 நாட்களில் மட்டும் யமுனா நதியில் இருந்து 1300 டன் குப்பை கழிவுகள் அகற்றப்பட்டு உள்ளன. ஆற்றில் கழிவுகளை வெளியேற்றும் 18 முக்கிய வடிகால் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படுவதன் மூலம் யமுனை முற்றிலும் மாசடைவதில் இருந்து மீட்கப்படும்" என்றார்.

# அண்ணா அமர்ந்தார்; தமிழ்நாடு எழுந்தது: முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை, மார்ச். 7

மார்ச் 6, 1967ல் அண்ணா தலைமையிலான அரசு பொறுப்பேற்றதை முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் நினைவுகூர்ந்துள்ளார்.

இது தொடர்பாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது: 1967: அண்ணா அமர்ந்தார்; தமிழ்நாடு எழுந்தது!

தலைநிமிர்ந்த தமிழ்நாட்டுக்குத் தீங்கொன்று வருகுதென்றால் வேலெனப் பாய்வோம்! வேங்கையெனச் சீறிடுவோம்! வெற்றி வாகைதனைச் சூடிடுவோம்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாமன்ற உறுப்பினர் பெ. திவாகரன் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றார்

ஊட்டி, மார்ச். 7

ஊட்டி: நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மாமன்ற உறுப்பினர்களுக்கான இரண்டாவது நாள் பயிற்சி முகாம் ஊட்டியில் நடைபெற்றது.

இந்த பயிற்சி முகாமில், திருப்பூர் மாநகராட்சி கல்விக்குழுத் தலைவர் மற்றும் 36வது வார்டு மாமன்ற உறுப்பினர்பெ. திவாகரன்(B.A., M.C.) கலந்து கொண்டு பயிற்சியில் பங்கேற்றார். நகர்ப்புற நிர்வாகம்,




குடிநீர் வழங்கல் முறைகள், மற்றும் பொதுநலத் திட்டங்களை செயல்படுத்துவது குறித்து இப்பயிற்சி முகாமில் விரிவாக அலசப்பட்டது.

பயிற்சி நிறைவில், பெ. திவாகரன் உட்பட கலந்து கொண்ட மாமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரிகள் சான்றிதழ்களை வழங்கினர். இந்த நிகழ்வில் நகராட்சி நிர்வாக அதிகாரிகள் மற்றும் பல முக்கிய நபர்கள் பங்கேற்று பயிற்சியின் முக்கியத்துவத்தை விளக்கினர்.

## அகில இந்திய விவசாய அமைப்பின் சார்பாக இந்திய மாநில முழுவதும் உள்ள சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து கோரிக்களை நிறைவேற்றப்பட வேண்டும்

அகிலஇந்தியவிவசாயஅமைப்பின் சார்பாக இந்திய மாநில முழுவதும் உள்ள அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு துறை களான மாநகராட்சி நகராட்சி பேருராட்சி ஊராட்சி பொது பணி துறை நெடுஞ்சாலைதுறை சாலை பணியாளர்கள் போன்ற துறைகளில் தின கூலி ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதிய பணியாளர்களாக பணியாற்றி வருவபர்களை முழு நேர பணியாளராக நிரந்தரப்படுத்த வேண்டியும் ஒப்பந்தம் என்ற அடிப்படையில் தனியார் துறைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையில் இருக்கும் தமிழக அரசும்



மாநில அரசும் அந்த நிலையை கைவிட வேண்டும் 20 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தர பணியில் அமர்த்திட வேண்டும் சம்பள உயர்வை உயர்த்திட வேண்டும் எனநிரந்தர பணியாளராக பணி அமர்த்த வேண்டும் ஒப்பந்தம் பணியாளர்கள் என்ற நிலையை கைவிட வேண்டும் என தமிழக அரசுக்கு அகில இந்திய விவசாய அமைப்பின் தென்னிந்திய ஒருங்கிணைப்பாளர் & தமிழ்நாடு மாநில தலைவர் முத்துகிருஷ்ணன் அவர்கள் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து கோரிக்களை நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்

## அவதூறு வழக்கு : நடிகர் வடிவேலு மாஸ்டர் கோர்ட்டில் ஆஜர்

சென்னை, மார்ச். 7

நடிகர் சிங்கமுத்து யூடியூப் சேனல்களில் அவதூறாக பேசியதாகக்கூறி ரூ.5 கோடி நஷ்ட ஈடு கேட்டு வடிவேலு சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அதில். "பல்வேறு யூடியூப்சேனல்களுக்கு நடிகர் சிங்கமுத்து அளித்த பேட்டியில், என்னைப் பற்றி துளி கூட உண்மையில்லாத பல பொய்களைக் கூறி, தரக்குறைவாக பேசி உள்ளார். எனவே சிங்கமுத்து ரூ. 5 கோடியை எனக்கு நஷ்டஈடாக வழங்க உத்தரவிட வேண்டும். அத்துடன் என்னைப் பற்றி அவதூறு பரப்ப சிங்கமுத்துவுக்கு தடை விதிக்க வேண்டும்" என கோரியிருந்தார்.

இந்த வழக்கின் விசாரணையில் வடிவேலுவுக்கு எதிராக தெரிவித்த கருத்துகளை திரும்ப பெற்றுகொள்வதாகவும், இனிமேல் அவருக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் எந்த கருத்தையும் தெரிவிக்கமாட்டேன் என்று சிங்கமுத்து தெரிவித்திருந்தார்.



சாட்சியங்களை பதிவு செய்வதற்காக விசாரணை மாஸ்டர் கோர்ட்டிற்கு மாற்றப்பட்டது. இந்நிலையில், சாட்சியம் அளிப்பதற்காக மாஸ்டர் கோர்ட்டில் நடிகர் வடிவேலு ஆஜரானார். சாட்சியம் முடிந்தபின்னர்ஆஜரானசிங்கமுத்து தரப்பு வழக்கறிஞர், வடிவேலுவிடம் குறுக்கு விசாரணை நடத்த ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளதாக முறையிட்டார். மேலும், வழக்கை 2 வாரங்களுக்கு ஒத்தி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, இந்த மனுவை விசாரிக்க மறுப்பு தெரிவித்த நீதிபதி வழக்கைமாஸ்டர்கோர்ட்டிலிருந்து ஐகோர்ட்டிற்கு அனுப்பிவைப்பதாகவும் குறுக்கு விசாரணை தொடர்பாக அங்கே முறையிட்டு கொள்ளலாம் என கூறியுள்ளார்.

## அமைச்சர் செந்தில்பாலாஜி நண்பர்களின் வீட்டில் அமலாக்கத்துறை சோதனை

கரூர், மார்ச். 7

கரூரில் அமைச்சர் செந்தில்பாலாஜியின் நண்பர்களின் வீடுகளில் 10க்கும் மேற்பட்ட அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதன்படி கரூரில் அரசு ஒப்பந்ததாரர் சங்கர் ஆனந்த் வீட்டில் கேரள மாநிலத்தை சேர்ந்த அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

2023 ம் ஆண்டு ஏற்கனவே அங்கு சோதனை நடைபெற்றநிலையில் மீண்டும் சோதனை நடைபெற்று வருகிறது.

இதுதவிர ராயனூர் பகுதியில் அமைந்துள்ள கொங்கு மெஸ் மணி என்பவர் வீடு, கோதை நகர் பகுதியில் அமைந்துள்ள சக்தி மெஸ் கார்த்தி வீடு உள்ளிட்ட மூன்று இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

## கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த நபரை துப்பாக்கியால் சுட்டுப்பிடித்த போலீசார்

தூத்துக்குடி, மார்ச். 7

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே உள்ள மேல நம்பிபுரத்தைச் சேர்ந்தவர் பூவன் மனைவி சீதாலட்சுமி (வயது 70). இவருடைய மகள் ராமஜெயந்தி (48). இவர் கணவரை விட்டு பிரிந்து பெற்றோரின் வீட்டில் வசித்து வந்தார். பூவன் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இதனால் ராமஜெயந்தி, தாயார் சீதாலட்சுமியுடன் வசித்து வந்தார்.

இந்த நிலையில் கடந்த 3ந்தேதி வீட்டில் இருந்த ராமஜெயந்தி, தாயார் சீதாலட்சுமி ஆகியோர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு கிடந்தனர். அவர்கள் அணிந்திருந்த சுமார் 13 பவுன் தங்க நகைகள் கொள்ளை போனது. வீட்டில் தாய்மகள் தனியாக இருந்ததை நோட்டமிட்ட மர்மநபர்கள் நைசாக வீடுபுகுந்து அவர்களை கழுத்தை நெரித்து கொலை செய்து நகைகளை கொள்ளையடித்து சென்றதாககூறப்படுகிறது.

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இரட்டைக்கொலை சம்பவம் குறித்து எட்டயபுரம் போலீசார்வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதுதொடர்பாக சுமார் 10 பேரை பிடித்து தீவிர விசாரணை மேற்கொண்டனர்.



இந்த நிலையில் இதில் முக்கிய குற்றவாளி, முத்துலாபுரம் வைப்பாற்று படுகை காட்டுப்பகுதியில் பதுங்கியிருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து 6 டிரோன் கேமராக்களை காட்டுப்பகுதியில் பறக்கவிட்டு போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். கண்காணிப்பு கேமராவில் பதிவாகும் காட்சிகளை அங்குலம் அங்குலமாக ஆய்வு செய்து கொலையாளியை வலைவீசி தேடி வந்தனர்.

இந்நிலையில்தாய்,மகள்கொலை வழக்கில் தொடர்புடைய முனீஸ்வரன் என்பவனை, குளத்தூர் உதவி ஆய்வாளர் முத்துராஜ் தலைமையிலான போலீசார்சுட்டுப்பிடித்ததாகதகவல் வெளியாகி உள்ளது. இதன்படி போலீசாரை வெட்டிவிட்டு தப்பமுயன்ற முனீஸ்வரனை போலீசார் துப்பாக்கியால் சுட்டுப்பிடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த முனீஸ்வரனுக்கு தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் முனீஸ்வரன் வெட்டியதில் காயமடைந்த எஸ்.ஐ.முத்துராஜா உள்ளிட்டோர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கவிஞர் நந்தலாலா உடலுக்கு உதயநிதி ஸ்டாலின் அஞ்சலி



திருச்சி, மார்ச். 7

பிரபல பட்டிமன்ற பேச்சாளர் கவிஞர் நந்தலாலா (வயது 69). தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்க துணைத் தலைவராகவும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்தார். உடல்நலக்குறைவால் பெங்களூருவில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர், நேற்று சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தார்.

அவரது உடல் ஆம்புலன்சில் திருச்சி கருமண்டபத்தில் உள்ள உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அவரது உடலுக்கு குடும்பத்தினர்கள், பொதுமக்கள் என பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில், மறைந்த கவிஞர் நந்தலாலா உடலுக்கு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அவருடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, மெய்யநாதன் உடனிருந்தனர்.

இது குறித்து உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில்,

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் துணைத்தலைவராகவும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். தலைசிறந்த கவிஞர் பட்டிமன்ற பேச்சாளர் நந்தலாலா உடல்நலக்குறைவால் மறைவுற்ற நிலையில், திருச்சி கருமண்டபத்தில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று நந்தலாலாவின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம்.

தந்தை பெரியார் பேறறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது பெரும் பற்று கொண்டவர். முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் மீது மதிப்பும் மரியாதையும் கொண்ட பண்பாளர். திரு.நந்தலாலா அவர்களின் மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தார், நண்பர்கள், த.மு.எ.க.ச தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்தோம். கவிஞர் நந்தலாலா அவர்கள் மறைந்தாலும், அவரது பணிகள் என்றும் நிலைத்திருக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சாம்சங் நிர்வாகம் பழிவாங்கல் நடவடிக்கையை கைவிட வேண்டும்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்



சென்னை, மார்ச். 7

சாம்சங் நிர்வாகம் பழிவாங்கல் நடவடிக்கையை கைவிட வேண்டும் என்று பெ.சண்முகம் கூறியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் பகுதியில் செயல்பட்டு வரும் சாம்சங் இந்தியா தொழிற்சாலையில் கடந்த ஆண்டு பல கட்ட போராட்டங்களை மேற்கொண்டு தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையை தொழிலாளர்கள் பெற்றனர். இந்நிலையில் கடந்த மாதம் சாம்சங் இந்தியா தொழிற்சாலையில் சிஐடியு தொழிற்சங்கம் அமைப்பதற்கு போராட்டம் நடத்திய சங்கத்தின் 3 தலைமை தொழிலாளர்களை ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரில் சாம்சங் நிர்வாகம் பணியிடை நீக்கம் செய்தது. இதனைக் கண்டித்தும், சாம்சங் நிறுவனத்தின் தொழிலாளர் விரோத பழிவாங்கல் நடவடிக்கையை கைவிட வலியுறுத்தியும் 2025 பிப்ரவரி 5ம் தேதி முதல் 1,300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்த போராட்டத்திற்கு சுமூகத் தீர்வு காண்பதற்கு தொழிலாளர் நலத்துறை முன்னிலையில் 10 கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டும் இதுவரை எந்த முடிவும் எட்டப்படாமலேயே தொடர்கிறது.

தொழிலாளர்கள் சங்கம் வைத்த ஒரே காரணத்திற்காக அவர்களின் தொழிற்சங்கத்தை ஏற்க மறுப்பதும், அதை முற்றிலுமாக அழிக்க முனையும் தீய நோக்கத்தோடு சாம்சங் நிர்வாகம் தொடர்ந்து செயல்பட்டு வருவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

சாம்சங் நிர்வாகத்தின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை தொழிற்சாலையின் தலைமை நிர்வாக மேலாளருக்கு எடுத்துரைப்பதற்காக சென்ற சங்கத்தின் தலைமை நிர்வாகிகள் மூன்று பேரை நிர்வாகம் பணியிடை நீக்கம் செய்தது. இந்த பழிவாங்கல் நடவடிக்கைகையை கண்டித்தும், திரும்ப பெற வலியுறுத்தியும் தொழிலாளர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வர நிர்வாகமும், தொழிலாளர் துறையும் தெரிவித்த ஆலோசனையை தொழிற்சங்கம் ஏற்று அமலாக்க முன்வந்தபோது நிர்வாகம் 1,600க்கும் மேற்பட்ட வெளி ஆட்களை வைத்து சட்டவிரோத உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபட்டு நிரந்தர தொழிலாளர்களை ஆலையை விட்டு வெளியேற்ற முயற்சித்தது. இது குறித்து உரிய முறையில் தகுந்த ஆதாரங்களுடன் மூன்று முறை புகார் அளித்தும் தொழிற்சாலைத் துறை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சாம்சங் நிர்வாகத்திற்கே ஆதரவாக செயல்பட்டது. இந்த பின்னணியில் சாம்சங் தொழிலாளர்கள் வெளி ஆட்களை அப்புறப்படுத்த வலியுறுத்திய போது மேலும் 20 தொழிற்சங்க நிர்வாகிகளை நிர்வாகம் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் நேரிடையாக பணியிடை நீக்கம் செய்தது.

அனைத்து தொழிலாளர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவும், இப்பிரச்சனைக்கு சுமூகத் தீர்வு காணவும் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள், சாம்சங் நிர்வாகம், தொழிற்சங்க நிர்வாகிகள் முன்பு நடந்த சமரசப் பேச்சுவார்த்தையில் தொழிலாளர்கள் வேலைக்கு செல்ல சம்மதித்த நேரத்தில் சாம்சங் நிர்வாகம் சங்கத்தை நிர்மூலமாக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு தொழிலாளியும் மன்னிப்பு கடிதம் எழுதி தர வேண்டுமென்றும், நடந்தவற்றிற்கு ஒவ்வொரு தொழிலாளியும் தன்னுடைய தனி குற்றமாக பொறுப்பேற்க வேண்டும் என்றும் கடிதம் எழுதிக் கொடுத்த பின்னரே ஆலைக்குள் விடுவோம் என்று நிபந்தனை விதித்ததுடன், தண்டனையாக 8 நாள் சம்பளமும் பிடித்தம் செய்துள்ளது. இவையனைத்தும் தொழிற்சாலை சட்டத்திற்கும், இந்திய தொழில் தகராறு சட்டத்திற்கும், இயற்கை நீதிக்கும் முற்றிலும் விரோதமானது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சிசுட்டிக்காட்ட விரும்புகிறது.

இந்தியாவில் செயல்படும் சாம்சங் நிர்வாகம் இந்திய நாட்டின் தொழிற்சாலை சட்டங்களையும், தொழிற்சங்க சட்டங்களையும் மதித்து செயல்படுவதற்கு தமிழக அரசு உரிய முறையில் சாம்சங் நிர்வாகத்திற்கு அறிவுறுத்த வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

எனவே, பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் உட்பட அனைவருக்கும் எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக வேலை வழங்கிட வேண்டுமெனவும், சாம்சங் நிர்வாகத்தின் பழிவாங்கல் நடவடிக்கையை முற்றிலும் கைவிடவும், இப்பிரச்சனையில் தமிழக அரசும், தொழிலாளர் நலத்துறையும் உடனடியாக தலையிட்டு சுமூகத் தீர்வு காண வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நித்திய சொர்க்கவாசல் கொண்ட பெருமாள் கோவில்



தஞ்சை, மார்ச். 7

கலியுக வெங்கடேசப் பெருமாள் கோவிலில் ஆண்டு முழுவதும் நித்ய சொர்க்க வாசல் வழியாக சென்று பெருமாளை தரிசனம் செய்து அதே சொர்க்க வாசல் வழியாக வரலாம்.

ரெதுவாக அனைத்து ரெருமாள் கோவில்களிலும், வைகுண்ட ஏகாதசி அன்று ஒரு நாள் மட்டுமே சொர்க்கவாசல் திறந்து இருக்கும். ஆனால் தஞ்சாவூர் தெற்கு வீதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற கலியுக வெங்கடேசப் பெருமாள் கோவிலில், நித்திய சொர்க்க வாசல் அமைந்துள்ளது. இங்கு பெருமாளை தரிசனம் செய்யும் பக்தர்கள், பின்னர் சொர்க்கவாசலைப் பயன்படுத்தி வெளியே வருவதை தினமும் வழக்கமாக கொள்கிறார்கள். எனவே இத்தலம் நித்திய சொர்க்கவாசல் கொண்ட பெருமாள் கோவில் என்ற பெயரைப் பெற்றுள்ளது.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் கனவில் தோன்றிய திருப்பதி வெங்கடேசப் பெருமாள், 'தஞ்சையில் தனக்கு வடக்கு நோக்கியபடி நித்திய சொர்க்க வாசலைப் போல நுழைவுவாசல் வைத்து ஒரு கோவில் கட்டு' என பணித்தார்.

மேலும் அவர் கூறுகையில் 'இத்தலத்தில் ஸ்ரீதேவி பூதேவி சமேதராக கலியுக வெங்கடேசப் பெருமாளாகவும், மகாலட்சுமி சமேதராக சதுர்புஜ வரதராஜப் பெருமாளாகவும் இரு கோலத்தில் எழுந்தருளி காட்சி தருவேன். இத்தலத்தில் புரட்டாசி மாத சனிக்கிழமைகளிலும், திருவோணம் நட்சத்திரம் மற்றும் வைகுண்ட ஏகாதசி அன்றும் நித்ய சொர்க்க வாசல் வழியாக வந்து என்னை தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு. திருப்பதியில் வைகுண்ட ஏகாதசி அன்று சொர்க்க வாசல் வழியாக சென்றால் கிடைக்கும் பலனையும் வைகுண்ட பதவியையும் தந்தருள்வேன்' என்று கூறி மறைந்தாராம்.

அதன்படி தஞ்சையை கைப்பற்றிய மராட்டிய மன்னர்கள், மராட்டிய சிற்பக்கலைகளின் கருவூலமாக திகழும் வகையில் இக்கோவிலை கட்டினார்கள். இத்தலத்தில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் புரட்டாசி சனிக்கிழமைதோறும் பெருமாளை தரிசனம் செய்வது வழக்கம். தமிழ்நாட்டில் வடதிசை ராஜ கோபுரம் கொண்ட ஒரே பெருமாள் கோவில் இது வாகும். இதன் காரணமாக இக்கோவில் நித்திய சொர்க்கவாசல் கோவில்' என அழைக்கப்படுகிறது.

வைகுண்ட ஏகாதசி அன்று சொர்க்கவாசல் வழியாக செல்ல இயலாத பக்தர்கள், இத்தலத்தில் ஆண்டு முழுவதும் நித்ய சொர்க்க வாசல் வழியாக சென்று பெருமாளை தரிசனம் செய்து அதே சொர்க்க வாசல் வழியாக வரலாம்.

இந்தக் கோவிலில், நவக்கிரகங்களுக்கு நடுவில் சூரியனுக்கு பதிலாக சந்திரன் இருக்கிறார். இதன் மேல் தளத்தில் கல்லினால் யந்திரம் பிரதிஷ்டை செய்துள்ளனர். இந்த சன்னிதிக்கு தனி விமானமும், சுலசமும் உள்ளது. இங்குள்ள நவக்கிரகங்களை வழிபாடு செய்தால் ஜாதகத்தில் உள்ள அனைத்து விதமான தோஷங்களும் நீங்கும் என்பது நம்பிக்கை. இத்தலத்தில் புரட்டாசி சனிக்கிழமைகளில் உற்சவருக்கு சிறப்பு அலங்காரம் நடக்கிறது.

வைணவத் திருக்கோவிலான இந்த ஆலயத்தில், சிவாலயங்களில் காணப்படும் கணபதி, கொற்றவை, பிச்சாடனர், நடராஜர் ஆகிய தெய்வங்கள் கருவறை கோஷ்டத்தில் இடம் பெற்று உள்ளன. மேலும் சிவாலயங்களில் சிவனுக்குரிய வில்வ மரம் இந்தக் கோவிலில் மகாலட்சுமி அம்சமாகவும், தல விருட்சமாக இருப்பது சிறப்பு.

# தூத்துக்குடிவாஞ்சி மணியாச்சி பயணிகள் ரெயில் நாளை முதல் ஏப்.4ந் தேதி வரை ரத்து



சென்னை, மார்ச். 7

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தூத்துக்குடி ரெயில் நிலைய பகுதியில் மழை நீர் தேங்குவதை தடுப்பதற்காக ரெயில்வே தண்டவாளத்தை உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதனால் தூத்துக்குடிவாஞ்சி மணியாச்சி இடையேயான ரெயில்களில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது.

அதன்படி வாஞ்சிமணியாச்சியில் இருந்து தூத்துக்குடிக்கு இரவு 9.05 மணிக்கு புறப்படும் பயணிகள் ரெயில் (56724) நாளை (வியாழக்கிழமை) முதல் 4.4.25 வரையும், தூத்துக்குடியில் இருந்து வாஞ்சி மணியாச்சிக்கு இரவு 10.35 மணிக்கு புறப்படும் பயணிகள் ரெயில் (56725) நாளை முதல் 4.4.25 வரை முழுமையாக ரத்து செய்யப்பட்டு உள்ளது.

இதே போன்று வாஞ்சி மணியாச்சியில் இருந்து தூத்துக்குடிக்கு காலை 3 மணிக்கு புறப்படும் பயணிகள் ரெயில் (56726) நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) முதல் 5.4.25 வரையும், தூத்துக்குடியில் இருந்து வாஞ்சி மணியாச்சிக்கு காலை 8.30 மணிக்கு புறப்படும் பயணிகள் ரெயில் (56723) நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) முதல் 5.4.25 வரை முழுமையாக ரத்து செய்யப்பட்டு உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பாஜகவின் வஞ்சக அரசியலுக்கு எதிராக உறுதியான முன்னகர்வு: சு.வெங்கடேசன் எம்பி



சென்னை, மார்ச். 7

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான அனைத்து கட்சி கூட்டம் முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்றது. இதில் தி.மு.க., அ.தி.மு.க., மக்கள் நீதி மய்யம், வி.சி.க., பா.ம.க. உள்பட சுமார் 53 கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டனர். பா.ஜ.க., நாம் தமிழர், தமிழ் மாநில காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில், அனைத்துக் கட்சி கூட்டம் குறித்து மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் 800க்கும் மேற்பட்டஇருக்கைகளை கொண்டு மக்களவை வடிவமைத்தது பாஜக. இது நாடாளு மன்றத்தின் எந்தவொரு கூட்டத்திலும் எடுக்கப்படாத முடிவு. பாஜகவின் மறைமுக செயல்திட்டத்தின் அபாயகரமான முன்னகர்வு. நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் எந்தவகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதை வலியுறுத்தி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அனைத்துக்கட்சி தீர்மானம் என்பது பாஜகவின் வஞ்சக அரசியலுக்கு எதிரான உறுதியான முன்னகர்வு. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நீலகிரி: காட்டுத்தீயை தடுக்க தீ தடுப்பு கோடுகள் வனத்துறை நடவடிக்கை



நீலகிரி, மார்ச். 7

நீலகிரி மாவட்டம் கூடலூரை அடுத்துள்ள முதுமலை வனப்பகுதியில் வறட்சி ஏற்பட்டுள்ளது. வறட்சி காலங்களில் காட்டுத்தீ ஏற்பட்டு, மரங்கள் எரிந்து சேதமாகும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனை தடுக்க வனத்துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக, காட்டுத்தீயை தடுக்க வனப்பகுதியில் உள்ள தண்டு மாரியம்மன் கோவிலில் பூஜை செய்து, அங்குள்ள பிரதான சாலையில் இரு பக்கமும் தீ தடுப்பு கோடுகள் அமைக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். முன்னதாக மசினகுடி வனச்சரகத்திற்கு உட்பட்ட வனப்பகுதியில் இந்த பணி தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# லண்டன் செல்லும் இசைஞானி இளையராஜாவுக்கு முத்தரசன் வாழ்த்து



சென்னை, மார்ச். 7

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

வருகிற 8ம் தேதி இங்கிலாந்து நாட்டின் தலைநகர் லண்டன் மாநகரில், இசைஞானி இளையராஜா நேரடி சிம்பொனி இசை நிகழ்ச்சி நடத்துவது நாட்டுக்கு பெருமையளிக்கும் சாதனையாகும். தற்போதைய தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைபுரத்தில் எளிய குடும்பத்தில், இரண்டு சகோதரிகளுடன் பிறந்த பாவலர் வரதராஜன், ஆர்.டி.பாஸ்கர், இளையராஜா, கங்கை அமரன் ஆகிய சகோதரர்கள் கம்யூனிஸ்ட் கருத்துக்களில் ஈர்க்கப்பட்டு, அமைப்பு சார்ந்த பணிகளுக்காக 1950களில் தொடங்கி, 1972 வரை உழைக்கும் மக்களின் உள்ளக் கொதிப்புகளை ஆயிரக்கணக்கான பாடல்களில் உணர்ச்சி பிரவாகிக்க மேடைகளில் அரங்கேற்றினார்கள்.

பாவலர் வரதராஜன் சகோதரர்கள் இசையும் பாடல்களும் கேட்காத செவிகள் இல்லை என்ற அளவிற்கு எல்லா ஊர்களையும் சுற்றி வந்து உழைக்கும் மக்களுக்கு உதவியதை பெரியவர்கள் இன்றும் பெருமையோடு நினைவு கூர்ந்து வருகிறார்கள். கால ஓட்டத்தில் திரையுலகில் நுழைந்து 1976 அன்னக்கிளி திரைப் படத்தில் அறிமுகமான ஆரம்ப நிலையிலேயே, இசைப் பயணத்தின் திசை வழியை தீர்மானிக்கும் சக்தியாக வெளிப்பட்ட இசைஞானி, இன்று, சர்வதேச நாடுகளிலும் தனக்கென தனி முத்திரை பதித்து, இசை வானில் தனித் தாரகையாக ஜொலித்து வருகிறார்.

ஆசிய கண்டத்திலேயே இவருக்கு நிகராக ஒப்பாரும், மிக்காரும் எவரும் இல்லை என்ற தனிச் சிறப்பு பெற்ற இசை ஞானி இளையராஜாவின் லண்டன் இசைப் பயணம் சிகரம் தாண்டி, உலகை வெல்லும் வெற்றிப் பயணமாகஅமையட்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பிளஸ்1 பொதுத்தேர்வில் 11,070 பேர் ஆப்சென்ட்



சென்னை, மார்ச். 7

பிளஸ்2 வகுப்பு மாணவ மாணவிகளுக்கான பொதுத்தேர்வு நேற்று முன்தினம் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து, பிளஸ்1 வகுப்புக்கான பொதுத் தேர்வு இன்று தொடங்கியது. முதல் நாளான இன்று தமிழ் உள்பட இதர மொழிப் பாடங்களுக்கான தேர்வு நடைபெற்றது. வருகிற 27ந்தேதி வரை தேர்வு நடைபெறுகிறது. ஒவ்வொரு தேர்வுக்கும் 2 முதல் 4 நாட்கள் வரை இடைவெளி விட்டு நடைபெறுகிறது.

தேர்வுக்காக 3 ஆயிரத்து 316 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த தேர்வை தமிழ்நாட்டில் உள்ள 7 ஆயிரத்து 557 பள்ளிகளில் இருந்து, 3 லட்சத்து 89 ஆயிரத்து 423 மாணவர்கள், 4 லட்சத்து 28 ஆயிரத்து 946 மாணவிகள் என மொத்தம் 8 லட்சத்து 18 ஆயிரத்து 369 பேர் எழுத இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பிளஸ் 1 பொதுத்தேர்வில் இன்று நடந்த மொழிப்பாடத்தேர்வை 11,070 பேர் எழுதவில்லை என்றும் 8,07,299 பேர் தேர்வு எழுதியுள்ளனர் என்று அரசு தேர்வு இயக்ககம் தெரிவித்துள்ளது.

# தொழில் முனைவோருக்கான சாட் ஜி.பி.டி. ஒரு நாள் பயிற்சி வகுப்பு

சென்னை, மார். 7

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் ஒரு நாள் பயிற்சி வகுப்பு "தொழில்முனைவோருக்கான ChatGPT" பயிற்சி வரும் 15.03.2025 அன்று நடைபெற உள்ளது. பயிற்சி நடைபெறும் இடம்: EDIITN வளாகம் சென்னை 600 032.

தொழில்முனைவோர், சிறுமற்றும்நடுத்தரவணிக உரிமையாளர்கள் மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவுநர்களுக்கு, ChatGPTஐ பயன்படுத்தி வணிக செயல்பாடுகளை எளிமைப்படுத்தவும்,

திறன் மேம்படுத்தவும், செலவுகளைகுறைக்கவும் உதவும்தகவல்கள்மற்றும் நடைமுறை பயிற்சிகளை இந்த பயிற்சி வகுப்பு வழங்கும்.

பயிற்சியில் இடம் பெறும் தலைப்புகள்:

★ ChatGPT அறிமுகம் மற்றும் ப்ராம்ப்ட் நுணுக்கங்கள்: ChatGPT இன் திறன்கள் மற்றும் வணிக தேவைகளுக்கேற்ப பொருத்தமான ப்ராம்ப்ட்டுகளை எழுதும் திறன்களை கற்றுக்கொள்ளுங்கள்.

★ தெளிவான இலக்கு நிர்ணயம்: ChatGPTன் உதவியுடன் உங்கள் நோக்கம் மற்றும் இலக்குகளை சரியான வழியில் அமைக்கவும், செயல்படுத்தவும் கற்றுக்கொள்ளுங்கள்.

★ மார்க்கெட்டிங் மற்றும் பிராண்டிங் யுக்திகள்: ChatGPTஐ பயன்படுத்தி புதுமையான மார்க்கெட்டிங் மற்றும் சமூக ஊடக திட்டமிடல் உத்திகளை கற்றுக்கொள்ளுங்கள்.

★ கான்டென்ட் உருவாக்கம் மற்றும் வாடிக்கையாளர் ஈர்ப்பு: தாக்கம் செய்கிற கான்டென்ட் உருவாக்கவும், வாடிக்கையாளர்களுடன் உரையாடலை மேம்படுத்தவும் AI கருவிகளை பயன்படுத்த கற்றுக்கொள்ளுங்கள்.

★ செயல்திறன் கண்காணிப்பு மற்றும் அளவீட்டு உத்திகள்: வணிக செயல்திறனை துல்லியமாக கண்காணிக்கவும், ChatGPTஐ பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யவும் கற்றுக்கொள்ளுங்கள்.

★ நேரடி சிக்கல் தீர்வு: இடுகையாளர் எதிர்கொள்ளும் தொழில்முனைப்பு சவால்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அமர்வில், ChatGPT மூலம் தீர்வுகளை கண்டுபிடிக்கவும்.

பங்கேற்பாளர்கள் 100க்கு மேற்பட்ட செயல்திறன் கொண்ட ChatGPT ப்ராம்ப்ட்டுகளுடன் ஒரு பிரத்யேக மின்புத்தகத்தையும், அன்றாட ப்ராம்ப்ட் வழிகாட்டுதல்கள் மற்றும் புதுப்பிப்புகளுக்கான ஒற்றுமையான வாட்ஸ்அப் சமூக அணுகலையும் பெறுவார்கள். இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.ediitn.in என்றவலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது: 90806 09808 /96771 52265 /98416 93060

அரசு சான்றிதழ் வழங்கப்படும். முன்பதிவு அவசியம்.

# முதல்வரின் சாதனைகளை, திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லும் பணியை தொடர்ந்திடுவோம்: தயாநிதி மாறன் எம்பி பேச்சு



சென்னை, மார்ச். 7

தமிழ்நாடு முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு, திமுக மருத்துவ அணியின் சார்பில் நடந்த வலையொலிபரப்பு நிகழ்ச்சியில், ‘திராவிட மாடல் நாயகர் ஒரு வாழும் சாகப்தம்’ என்ற தலைப்பில் விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்பி பேசியதாவது: முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறிய வயது முதல் கழகப் பணியில் குறிப்பாக, தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு பல்வேறு பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

பள்ளி செல்லும் சிறார்களுக்கு காலை உணவு திட்டத்தை இந்தியாவிலேயே சிறப்பாக நடைமுறைப்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். மகளிருக்கு உரிமைத் தொகை 1000 ரூபாய் கிட்டதிட்ட 1 கோடியே 16 லட்சம் தாய்மார்களுக்கு இன்று மாதம் அவரவர் வங்கி கணக்கிலே செலுத்துகிற திட்டத்தை சிறப்பான முறையில் செய்தார். இதை கிண்டலடித்த பா.ஜ. கூட அவர்கள் ஆட்சியைப் பிடித்துள்ள டெல்லிலேயே அதை பின்பற்றுகிறார்கள்.

இதுதான் எங்கள் தலைவர். அவரை நான் ஏன் வாழும் சகாப்தம் என்று சொல்கிறேன் என்றால், செய்த ஒவ்வொரு திட்டமும், ஏன் கொரோனா நேரத்திலே எந்த ஒரு எதிர்க்கட்சியாவது வெளியே வந்ததா, இல்லையே எந்த அரசியல்வாதியாவது வெளியே வந்தாரா, அப்போது பார்த்தீர்களேயானால் அவரே முன்நின்று ஒவ்வொரு பக்கமும் சென்று, கொரோனாவால் பாதிக்கப்பட்டார்களோ அவர்களின் சிகிச்சையை பற்றியும், கொரோனாவார்டுக்கு செல்ல அச்சம்படும் நேரத்திலே கூட, மருத்துவர்களே கொரோனா வார்டுக்கு செல்ல அச்சப்படும்போதும், நேராக மருத்துவமனைக்கு சென்று தமிழ்நாட்டு மக்கள் என் மக்கள் உங்களுக்காக நான் பாடுபடுவேன் என்று கொரோனாவில் இருந்து விடுபட இலவச தடுப்பூசிகளை வழங்கி இந்த தமிழகத்தை மீட்டவர் அவர்தான். இதை பின்பற்றிதான் மற்ற மாநிலங்களும் இலவச ஊசி திட்டத்தையே பின்பற்றின.

இவ்வாறு சிறப்புற நல்லாட்சி புரிந்தார். ஒரு சிறந்த முதல்வர், சிறந்த தலைவர் இன்று அதையும் தாண்டி இந்த தமிழ்நாட்டு பிள்ளைகள் எல்லாம் அப்பா, அப்பா என்று அன்பாக அழைக்கின்றார்கள். காரணம் அவர் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பினருக்கும் பல்வேறு பணிகளை, பல்வேறு மக்கள் நலன்பயக்கும் திட்டங்களை செய்து வருகின்றார். இப்படி பல்வேறு சிறப்புகளை செய்துவரும் திராவிட மாடல் முதல்வர் பல்லாண்டுகள் வாழ்ந்திட வேண்டும். முதல்வர் செய்திருக்கின்ற சாதனைகளை, திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்கின்ற பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# சென்னையில் 8ம் தேதி பொது விநியோக திட்ட மக்கள் குறைதீர் முகாம்



சென்னை, மார்ச். 7

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

பொது விநியோகத் திட்டத்தின் பயன்களை குடிமக்கள் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர் முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி மார்ச் 2025 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களில் வருகிற 8ம் தேதி அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், கைபேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் உள்ளிட்ட பொது விநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நியாய விலைக் கடைகளில் பொருள் பெற நேரில் வருகை தர இயலாத மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்படும். மேலும், பொது விநியோகக் கடைகளின் செயல்பாடுகள்,

தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் குறித்த புகார்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பொதுமக்கள் இம்முகாமில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையிலுள்ள 19 மண்டல அலுவலகப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சட்டகல்லூரி உதவி பேராசிரியர் பணியிடங்களுக்கு ஓராண்டு முதுகலை சட்டப்படிப்பு படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்: சென்னை ஐகோர்ட் உத்தரவு

சென்னை, மார்ச். 7

ஓராண்டு முதுகலை சட்டப் படிப்பு படித்தவர்களை, சட்டக் கல்லூரிகளில் உதவி பேராசிரியர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க அனுமதியளித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் அரசு சட்டக்கல்லூரிகளில் உதவி பேராசிரியர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலமாக பெறப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியம் கடந்த ஜனவரி 24ம் தேதி வெளியிட்டுள்ள அறிவிப்பாணையில், உதவி பேராசியர் பணிக்கு விண்ணப்பிக்க ஓராண்டு முதுகலை சட்டப் படிப்பை தகுதியாக கருத முடியாது. முதுகலை சட்டப்படிப்பில் இரண்டு ஆண்டுகள் நிறைவு செய்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதை எதிர்த்து, ஆண்டாள் உள்ளிட்ட 3 பேர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கு நீதிபதி சி.வி.கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் வி.ஜெய்பரத் மற்றும் ஒய்.கவிதா ஆஜராகி, அரசு சட்டக் கல்லூரி உதவி பேராசிரியர் பணியிடங்களுக்கு ஓராண்டு சட்ட முதுகலை படிப்பை முடித்தவர்களையும் விண்ணப்பிக்க அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டனர். இதையடுத்து நீதிபதி, மனுதாரர்களிடம் ஆன்லைன் மூலம் உதவி பேராசிரியர் பணிக்கு விண்ணப்பங்களை பெற வேண்டும். அவர்களின் விண்ணப்பங்களை நிராகரிக்க கூடாது என்று உத்தரவிட்டார். மேலும், இது தொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழக அரசின் உயர் கல்வி துறை, சட்டத்துறைக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். இந்த வழக்கில் ஆசிரியர் தேர்வு வாரியம் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை மார்ச் 13ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# வேங்கைவயல் விவகாரம்: 3 பேருக்கு சம்மன் வழங்கிய சிபிசிஐடி போலீசார்



புதுக்கோட்டை,மார்ச்.7

புதுக்கோட்டை அருகே வேங்கைவயலில் பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ந் தேதி அசுத்தம் கலக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி. போலீசார் கடந்த 2 ஆண்டுகளாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இவ்வழக்கில் புதுக்கோட்டை வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவு சிறப்பு நீதிமன்றத்தில் கடந்த ஜனவரி மாதம் 20ந் தேதி குற்றப்பத்திரிகையை சி.பி.சி.ஐ.டி. போலீசார் தாக்கல் செய்தனர். இதில் அதே பகுதியை சேர்ந்த போலீஸ்காரர் முரளிராஜா, சுதர்சன், முத்துராஜா ஆகிய 3 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. குடிநீர் தொட்டியில் அசுத்தம் கலந்ததில் தொடர்பு இருப்பதாக அறிவியல் பூர்வமாக ஆதாரங்களை திரட்டி, தாக்கல் செய்தனர்.

இதையடுத்து 3 பேர் மீதும் சிபிசிஐடி காவல் துறையினர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். இந்த குற்றப் பத்திரிக்கையை ஏற்கக்கூடாது என புதுக்கோட்டை வன்கொடுமை தடுப்புச் சட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு வன்கொடுமை சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்த நிலையில், வழக்கில் வன்கொடுமை சட்டப்பிரிவு இல்லாததை சுட்டிக்காட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றப்பட்டது. மேலும் சிபிசிஐடி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையை ஏற்றுக்கொள்வதாகவும் நீதிமன்றம் அறிவித்தது.

இந்த நிலையில், வேங்கைவயல் விவகாரத்தில் குற்றப்பத்திரிக்கையில் இடம்பெற்றுள்ள 3 பேரையும் வருகிற 11ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சிபிசிஐடிக்கு புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, காவலர் முரளி ராஜ், முத்துகிருஷ்ணன் மற்றும் சுதர்சன் ஆகிய 3 பேருக்கும் சிபிசிஐடி போலீசார் இன்று வேங்கைவயல் கிராமத்திற்குச் சென்று சம்மன் வழங்கினர். அவர்கள் வீட்டில் இல்லாத நிலையில் அவர்களது குடும்பத்தினரிடம் சம்மன் வழங்கப்பட்டது. இதனால் 11ம் தேதி 3 பேரும் ஆஜராவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சாலைகள் நன்றாக இருப்பதால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமிழகம் வருகை: அமைச்சர் எ.வ.வேலு தகவல்



சென்னை, மார்ச். 7

தென்னிந்தியாவிலேயே தமிழ்நாட்டில் சாலைகள் நன்றாக இருப்பதால், வெளிநாடுகளில் இருந்து முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து முதலீடு செய்கிறார்கள் என நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு கூறியுள்ளார். சென்னை, கிண்டிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய பயிற்சி மையக் கூட்டரங்கில், தமிழ்நாட்டின் பொருளாதாரம், ஒரு டிரில்லியன் டாலராக உயர்த்த நெடுஞ்சாலைத் துறையின் பங்களிப்பு தொடர்பாக கருத்தரங்கினை நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அவர் கூறியதாவது: 2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி ஒரு டிரில்லியன் டாலர், அதாவது ரூ.83.5 லட்சம் கோடி அமெரிக்க டாலராக வளர்ச்சி பெற செய்ய வேண்டும் என்ற இலக்கினை முதல்வர் நிர்ணயித்துள்ளார். கடந்த அக்டோபர் மாதம் முதலமைச்சருக்கு “ஆசிய மனிதவள மேம்பாட்டு விருது“ வழங்கப்பட்டது. அந்த விருது ஆசியாவிலேயே மிகவும் புகழ் பெற்றது. யார் மனிதவள மேம்பாட்டிற்கு மிகச் சிறந்த பங்களிப்பினை நல்கி அதன் மூலமாக சமூகத்தின், வணிகத்தின், பொருளாதாரத்தின் வளர்ச்சியில் மிகச் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார்களோ, அவர்களுக்கே இந்த விருது வழங்கப்படுகிறது. முதலமைச்சர் அல்லும் பகலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பற்றியும், இளைஞர்களின் வேலைவாய்ப்பு பற்றியும் மட்டுமே சிந்தித்து வருகிறார்.

அதன் தொடர்ச்சியாகத்தான் தமிழ்நாட்டின் பொருளாதாரம் பன்மடங்கு உயர வேண்டும் என்று விரும்புகிறார். வளர்ச்சிக்கு சாலைக் கட்டமைப்பு மிக முக்கியமானது. தென்னகத்திலேயே தமிழ்நாட்டில் சாலைகள் நன்றாக இருப்பதால், வெளிநாடுகளில் இருந்து முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து முதலீடு செய்கிறார். உற்பத்தி செய்கின்ற பொருட்களை சந்தைப்படுத்த சாலைகள் சிறப்பாக இருக்க வேண்டும். திரிபுரா கவர்னர், கன்னியாகுமரியில் உள்ள கண்ணாடி பாலத்தை பார்த்து ரசித்த புகைப்படத்தை தமிழ்நாடு முதலமைச்சர் தகவலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த கண்ணாடி பாலம் வெளிமாநிலத்தவர்கள் மட்டுமல்லாமல், உலகிற்கு தெரியக்கூடிய அளவில் உள்ளது. இதனால், சுற்றுலா வருவாய் அதிகமாகும். தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வைக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னை கிரேட்டர் கார்ப்பரேஷன் கல்வித் துறை ஆண்டு விளையாட்டுப் போட்டி



சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் சிறப்பாக நடைபெற்ற சென்னை கிரேட்டர் கார்ப்பரேஷன் கல்வித் துறை ஆண்டு விளையாட்டுப் போட்டி 202425 இல், ஜிசிசி கல்வி மாவட்ட அளவில் 1419 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுக்கான 200 மீட்டர் ஓட்டப் போட்டி நடைபெற்றது. போட்டியில் பல்வேறு பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் உற்சாகமாக பங்கேற்று தங்களின் திறமையை வெளிப்படுத்தினர். இந்த தடகள போட்டிகள் மாணவர்களின் உடல் உறுதியையும், மன உறுதியையும் வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

# மனைவி, 2 குழந்தை சாவில் தேடப்பட்ட வங்கி ஊழியர் ரயிலில் பாய்ந்து தற்கொலை



நாமக்கல், மார்ச். 7

நாமக்கல் மாவட்டம் பெரிய மணலியை சேர்ந்தவர் பிரேம்ராஜ் (38). தனியார் வங்கி ஊழியர். இவரது மனைவி மோகனப்பிரியா (34). மகள் பிரினித்தி (6), மகன் பிரினிராஜ் (2). நேற்று முன்தினம் பிரேம்ராஜின் மனைவி மோகனப்பிரியா, மகள் பிரினித்தி, மகன் பிரினிராஜ் ஆகிய 3 பேரும், வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடந்தனர். இதுபற்றி தகவல் அறிந்த நாமக்கல் போலீசார் விசாரணை நடத்தி, மாயமான பிரேம்ராஜை தேடி வந்தனர். அவர் எழுதிய கடிதத்தில் ஆன்லைன் ஆப்பில், கடந்த ஒரு வாரத்தில் ரூ.50 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

எங்களை மன்னித்து விடுங்கள் என எழுதியுள்ளார்.

இந்நிலையில், பிரேம்ராஜ் கரூரில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டது, நேற்று மதியம் நாமக்கல் போலீசாருக்கு தெரிய வந்தது.

பிரேத பரிசோதனையில் மோகனபிரியா தூக்கில் தற்கொலை செய்து கொண்டது உறுதிசெய்யப்பட்டு உள்ளது.

# குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பூத்து குலுங்கும் ரோடோடென்ட்ரான் மலர்கள்



குன்னூர், மார்ச். 7

இமாலய பகுதிகளில் காணப்படும் ரோடோடென்ட்ரான் ஹார்பேரியம் மலர்கள் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மலர்ந்துள்ளன. நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நுற்றாண்டு பழமையான மரங்கள் மற்றும் தாவரங்கள் உள்ளன. இவை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வந்து நடவு செய்யப்பட்டவை. குறிப்பாக இமயமலை பகுதிகளில் மட்டும் காணப்படும் ருத்ராட்சை மரங்கள் மற்றும் குரங்குகள் ஏறா மரங்கள் என பல்வேறு மரங்கள் உள்ளன. மேலும் மேற்கு தொடர்ச்சி மலைகளில் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 2500 அடி உயரத்தில் அடர்ந்த சோலை காடுகளில் மட்டும் காணப்படும் ரோடோ டென்ட்ரான் ஹார்பேரியம்வகையான மலர்கள் தற்போது சிம்ஸ்பூங்காவில் பூக்க துவங்கியுள்ளன.

இமாச்சல் பகுதிகளில் மட்டுமே காணப்படும் இவ்வகையான மரங்கள் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பூத்துள்ளதை சுற்றுலா பயணிகள் ஆச்சரியத்துடன் பார்த்து ரசித்து வருகின்றனர். மேலும் குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளில் ஒரே ஒரு மரம் உள்ளது. அதுவும் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மட்டுமே உள்ளது. இவ்வகை மரங்களில் குளிர் காலத்தில் மட்டுமே மலர்கள் மலரும். தற்போது குன்னூர்சிம்ஸ் பூங்காவில் ரோடோடென்ட்ரான் ஹார்பேரியம் மலர்கள் பூத்துள்ளன. இதை பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் கண்டு ரசித்து செல்கின்றனர்.

# நீதிபதிகள் நியமனத்தில் அனைத்து சமூகத்திற்கும் பிரதிநிதித்துவம்: வழக்கறிஞர் சங்க பொதுக்குழுவில் தீர்மானம்

சென்னை, மார்ச். 7

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் அவசர பொதுக்குழு கூட்டம் சங்கத் தலைவர் ஜி.மோகனகிருஷ்ணன் தலைமையில் நேற்று நடைபெற்றது. சங்க செயலாளர் ஆர்.கிருஷ்ணகுமார், துணைத் தலைவர் அறிவழகன், பொருளாளர் ஜி.ராஜேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும் வழக்கறிஞர் ஆர்.சி.பால் கனகராஜ், எம்.வேல்முருகன், சங்கர சுப்பு, விஜயகுமார் ரஜினி காந்த், பார்வேந்தன், மில்டன் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் பேசினர். பின்னர், நீதிபதிகள் நியமனத்தில் அனைத்து சமுதாயத்தினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் தர வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை (வெள்ளிக்கிழமை மதியம்) ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

# ஆன்லைன் டிரேடிங்கிற்கு பணம் தர மறுத்ததால் மாடியில் இருந்து குதித்து மாணவர் தற்கொலை

ஈரோடு, மார்ச். 7

ஈரோடு கிருஷ்ணம்பாளையம் சிந்தன் நகரை சேர்ந்தவர் ரபீக் ராபியா தம்பதியினரின் மகன் முகமது யூனுஸ் (19). இவர், ஈரோடு பெருந்துறை சாலையில் உள்ள கல்லூரியில் பி.டெக் அக்ரி 2ம் ஆண்டு படித்து வந்தார். ஆன்லைன் வர்த்தகமும் செய்து வந்தார். கடந்த மாதம் 27ம் தேதி ஆன்லைன் வர்த்தகம் செய்ய தாய் ராபியாவிடம் பணம் கேட்டுள்ளார். அவர் தெரிந்தவர்களிடம் கடன் வாங்கி ரூ.37 ஆயிரத்தை கொடுத்துள்ளார். அந்த பணத்தை முகமது யூனுஸ் ஆன்லைன் வர்த்தகத்தில் இழந்துள்ளார்.

இதைத்தொடர்ந்து மீண்டும் ஆன்லைன் வர்த்தகம் செய்வதற்காக, ராபியா வேலை செய்த வீட்டுக்கு முகமது யூனுஸ் சென்று பணம் கேட்டுள்ளார். அவர் பணம் தர மறுத்துள்ளார்.

இதில், விரக்தியடைந்த முகமது யூனுஸ் கடந்த 28ம் தேதி 2வது மாடியில் இருந்து கீழே குதித்தார். இதில் அவரது 2 தொடை எலும்புகள், கை மணிக்கட்டு முறிந்தது. கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி நேற்று முகமது யூனுஸ் உயிரிழந்தார். இது குறித்து ஈரோடு கருங்கல் பாளையம் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் முகாம்: விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவு



சென்னை, மார்ச்7

சென்னை பெருநகர காவல் ஆணையாளர், காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் முகாமில் பொதுமக்களின் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அருண், சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்று வரும் பொதுமக்கள் குறை தீர் முகாமில், காவல் அதிகாரிகள் பொதுமக்களின் புகார் மனுக்களை பெற்று விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அருண் இன்று (05.03.2025)புதன்கிழமை காவல் ஆணையரகத்தில் புகார் மனு கொடுக்க வந்த 25 பொதுமக்களிடம் இருந்து புகார் மனுக்களை பெற்று, விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்வின்போது, துணை ஆணையாளர் (நிர்வாகம்)G.சுப்புலட்சுமி அவர்கள் உடனிருந்தார்.

# குலசையில் ராக்கெட் ஏவுதள கட்டுமான பணி தொடக்கம்: 2026 ஆகஸ்டில் முடியும் என தகவல்



உடன்குடி, மார்ச். 7

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில் மணப்பாடு கிழக்கு கடற்கரையை ஒட்டிய கூடல்நகரைச் சுற்றி 2,292 ஏக்கர் நிலத்தில் ரூ.985.96 கோடி மதிப்பீட்டில் புதிதாக சிறிய ரக ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்காக கடந்தாண்டு தூத்துக்குடியில் நடந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். இந்நிலையில் நேற்று ராக்கெட் ஏவுதளத்தில் உள்கட்டமைப்பு கட்டுமானப் பணிகளுக்கான பூமி பூஜை நடந்தது. இந்த பணிகளை இஸ்ரோ ஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி மைய ஏவுதள இயக்குநர் ராஜராஜன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். முன்னதாக சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் இஸ்ரோ விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்து நிருபர்களிடம் ராஜராஜன் கூறுகையில், 'குலசேகரன் பட்டினம் ராக்கெட் ஏவுதள கட்டுமான பணிகள், வரும் 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் முழுமையாக நிறைவடையும். இங்கு சிறிய ரக ராக்கெட்டுகள் ஏவப்படும். ராக்கெட் ஏவுதளத்தில் லாஞ்ச்பேட் உள்ளிட்ட 20 உள்கட்டமைப்பு பணிகள் நடைபெற உள்ளது. தற்போது முதற்கட்டமாக உள்கட்டமைப்பு பணிகள் துவங்கப்பட்டு உள்ளது. 2026 இறுதிக்குள் எஸ்எஸ்எல்வி ராக்கெட் ஏவப்படும்' என்றார்.

# கடந்த 2 மாதங்களில் மட்டும் 550 அவமதிப்பு வழக்குகள்: ஐகோர்ட் கிளை விசாரணை



மதுரை, மார்ச். 7


தூத்துக்குடி மாவட்ட துணை ஆட்சியராக பணியாற்றிய செல்வநாயகம், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், ''பணி ஓய்வு நாளில் எந்தவித காரணமுமின்றி பணியிடை நீக்கம் செய்யப்பட்டேன். இதை ரத்து செய்து, எனது ஓய்வூதிய பணப் பலன்களை வழங்குமாறு உத்தரவிட வேண்டும்'' என்று கூறியிருந்தார். இதேபோல் திருநெல்வேலியைச் சேர்ந்த முருகேஷ், நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாத வருவாய்த்துறை அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க கோரி மனு தாக்கல் செய்தார். இந்த மனுக்கள் நீதிபதி பட்டு தேவானந்த் முன் விசாரணைக்கு வந்தது. தமிழ்நாடு வருவாய் துறை முதன்மை செயலாளர் அமுதா நேரில் ஆஜரானார்.

அப்போது நீதிபதி, ''கடந்த 2 மாதங்களில் மட்டும் ஐகோர்ட் மதுரை கிளையில் 550 நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட துறை செயலாளர்கள் மட்டத்தில் 3 மாதங்கள் தாமதமாக நடவடிக்கை எடுக்கின்றனர். ஆனால், மாவட்ட கலெக்டர்கள், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் தாசில்தார் அளவில் நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்த 3 ஆண்டுகள் காலதாமதமாகத்தான் நடவடிக்கை எடுக்கின்றனர். இந்த வழக்கில் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற தாமதம் ஏற்பட்டதற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர்தான் காரணம்.

நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற மாட்டோம் என்பதை அரசு அதிகாரிகள் கொள்கையாக, உறுதிமொழி எடுத்து பணியாற்றி வருகின்றனரா? கல்வித்துறையில் அதிகமான நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தாக்கல் செய்யப்படுகிறது. கடந்த 2023ம் ஆண்டு தமிழக தலைமை செயலாளர் சிவதாஸ்மீனா நீதிமன்ற உத்தரவுகளை தாமதமின்றி உடனடியாக நடைமுறைப்படுத்த உத்தரவிட்டிருந்தார். ஆனால் தலைமை செயலாளர் உத்தரவை எத்தனை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தினர்? தலைமை செயலாளர் உத்தரவிட்டது தேவையற்றதா'' என்றார். அரசு தரப்பில், ''நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாத சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்''

என உறுதி அளிக்கப்பட்டது. இதையடுத்து நீதிபதி, வழக்கு விசாரணையை ஏப். 2க்கு தள்ளி வைத்தார்.

# தமிழ் சினிமாவில் பிடித்த நடிகர் மிருணாள் தாகூர் கூறியது யாரை தெரியுமா?



இந்தி மற்றும் தெலுங்கு படங்களில் நடித்ததன் மூலம் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருபவர் நடிகை மிருணாள் தாகூர். சீதா ராமம், ஹாய் நானா, லஸ்ட் ஸ்டோரீஸ் போன்ற படங்களில் நடித்ததன் மூலம் ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானார். இவரது நடிப்பில் கடைசியாக வெளிவந்த படம் 'பேமிலி ஸ்டார்'. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியான இப்படம் பாக்ஸ் ஆபீஸில் சோபிக்க தவறியது.

தற்போது இவர் தெலுங்கில் 'டகோயிட்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இவ்வாறு பல மொழி படங்களில் நடித்து வரும் மிருணாள் எப்போது தமிழ் படத்தில் நடிப்பார் என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இதனையடுத்து விரைவில் கோலிவுட்டுக்கு வருவார் என எதிர்பார்க்கப்படும் மிருணாள் தாகூர் சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் தமிழ் சினிமாவில் தனக்கு பிடித்த நடிகர் யார் என்றும் யாருடன் சேர்ந்து நடிக்க வேண்டும், யாருடன் சேர்ந்து நடனமாட வேண்டும் என்பதை வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

அதன்படி, நடிகர் கமலுடன்தான் நடிக்க வேண்டும் என்றும் அவருடன்தான் நடனமாட ஆசை இருப்பதாகவும் கூறி இருக்கிறார்.

# இந்த ஆண்டின் முதல் ரூ. 500 கோடி படம்... சாதனை படைக்குமா சாவா?




மராத்திய பேரரசர் சத்ரபதி சிவாஜி சாயிபாய் தம்பதியின் மூத்த மகனான சத்ரபதி சம்பாஜி மகாராஜாவின் வாழ்க்கை வரலாற்றை மையமாக கொண்டு உருவாகியுள்ள திரைப்படம் 'சாவா'. சிவாஜியின் மறைவைத் தொடர்ந்து சம்பாஜியின் மராட்டிய படைக்கும் முகலாயப் படைக்கும் இடையே நடக்கும் போராக இப்படத்தின் கதை உருவாகியிருந்தது. லக்ஸ்மன் உடேகர் இயக்கியுள்ள இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார்.

இந்த படத்தில் பிரபல பாலிவுட் நடிகர் விக்கி கவுசல் சத்ரபதி சம்பாஜி மகாராஜாவாக நடித்துள்ளார். நடிகை ராஷ்மிகா மந்தனா சம்பாஜியின் மனைவி மகாராணி ஏசுபாய் கதபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் நடிகர் அக்சய் கண்ணா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ரூ.130 கோடி பட்ஜெட்டில் உருவாக்கப்பட்ட இப்படம் கடந்த மாதம் 14ம் தேதி திரையரங்குகளில் வெளியாகி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

தற்போதுவரை இப்படம் ரூ. 472 கோடி வசூலித்திருப்பதாக கூறப்படுகிறது. விரைவில் ரூ.500 கோடி வசூலை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு வசூலிக்கும் பட்சத்தில் இந்த ஆண்டு வெளியாகி ரூ. 500 கோடி வசூலித்த முதல் படம் என்ற சாதனையை 'சாவா' படைக்கும்.

# மாளவிகா மோகனனின் அடுத்த பாலிவுட் படம்?



மலையாள திரைப்படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமான நடிகை மாளவிகா மோகனன், தமிழில் 'பேட்ட', 'மாஸ்டர்' 'மாறன்' போன்ற படங்களில் நடித்து தமிழ் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தார். சமீபத்தில் விக்ரம் நடிப்பில் வெளியான தங்கலான் படத்திலும் சித்தாந்த் சதுர்வேதியுடன் 'யுத்ரா' படத்திலும் நடித்திருந்தார்.

தற்போது பிரபாஸுடன் 'தி ராஜா சாப்' படத்திலும், மோகன்லாலுடன் 'ஹிருதயபூர்வம்' படத்திலும் நடித்து வருகிறார். யுத்ரா படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமான இவர், தற்போது மீண்டும் ஒரு பாலிவுட் படத்தில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

# ஐ.சி.சி. ஒருநாள் தொடர்கள்: அரிய சாதனை நிகழ்த்திய ரச்சின் ரவீந்திரா




9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபியில் லாகூர் கடாபி ஸ்டேடியத்தில் நேற்று அரங்கேறிய 2வது அரைஇறுதி ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன்களான நியூசிலாந்தும், தென் ஆப்பிரிக்காவும் பலப்பரீட்சை நடத்தின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில்6விக்கெட்டுக்கு362ரன்கள்குவித்தது.அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா 108 ரன்களும், வில்லியம்சன் 102 ரன்களும் குவித்தனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் லுங்கி நிகிடி 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் 363 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி தென் ஆப்பிரிக்க அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 312 ரன்களே எடுத்தது. இதனால் நியூசிலாந்து அணி 50 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. அதிகபட்சமாக டேவிட் மில்லர் 100 ரன்கள் அடித்தார். நியூசிலாந்து தரப்பில் சான்ட்னெர் 3 விக்கெட்டும், மேட் ஹென்றி, பிலிப்ஸ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர். ரச்சின் ரவீந்திரா ஆட்டநாயகன் விருதை பெற்றார்.

நியூசிலாந்து இளம் வீரரான ரச்சின் ரவீந்திராவுக்கு இது 5வது ஒருநாள் சதமாகும். இந்த 5 சதங்களையும் இவர் ஐ.சி.சி. ஒருநாள் தொடர்களான உலகக்கோப்பை மற்றும் சாம்பியன்ஸ் டிராபியில்தான் அடித்துள்ளார். இதன் மூலம் தனது முதல் 5 ஒருநாள் சதங்களையும் ஐ.சி.சி. தொடர்களில் அடித்த முதல் வீரர் என்ற அரிய சாதனையை ரச்சின் ரவீந்திரா நிகழ்த்தியுள்ளார்.

மேலும் ஐ.சி.சி. ஒருநாள் தொடர்களில் குறைந்த இன்னிங்ஸ்களில் 5 சதங்கள் அடித்த வீரர் என்ற சாதனையையும் ரச்சின் ரவீந்திரா (13 இனிங்ஸ்கள்) படைத்துள்ளார். இதற்கு முன் ஷிகர் தவான் 15 இன்னிங்ஸ்களில் அடித்திருந்ததே சாதனையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல்.: சென்னை அணியின் கேப்டன்சி மாற்றத்தின்போது தோனி என்னிடம் கூறியது இதுதான் கெய்க்வாட்




இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல்.ன் 18வது சீசன் இந்த வருடம் நடைபெற உள்ளது. 10 அணிகள் பங்கேற்கும் இந்த தொடருக்கான அட்டவணை கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. அதன்படி இந்த தொடர் அடுத்த மாதம் 22ம் தேதி தொடங்குகிறது. கொல்கத்தாவில் நடைபெறும் முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பெங்களூரு ராயல் சேலஞ்சர்சை எதிர்கொள்கிறது.

இதில் முன்னாள் சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தனது முதலாவது ஆட்டத்தில் மார்ச் 23ந்தேதி சேப்பாக்கத்தில் மும்பை இந்தியன்சுடன் மோத உள்ளது.

முன்னதாக ஐ.பி.எல். தொடரின் முதல் சீசனிலிருந்தே சென்னை அணியின் கேப்டனாக செயல்பட்டு வந்த தோனி 5 கோப்பைகளையும் 2 சாம்பியன்ஸ் லீக் டி20 கோப்பைகளையும் வென்றுள்ளார். அதனால் வெற்றிகரமான ஐ.பி.எல் கேப்டனாக சாதனை படைத்துள்ள அவர் தற்போது 43 வயதை கடந்துள்ளார். அதனால் வருங்காலத்தை கருத்தில் கொண்டு சிஎஸ்கே கேப்டன்ஷிப் பொறுப்பை கடந்த வருடம் ருதுராஜ் கையில் ஒப்படைத்த அவர் சாதாரண விக்கெட் கீப்பராக விளையாடினார். அதோடு இந்த சீசனிலும் சென்னை அணியில் விளையாட உள்ளார். இருப்பினும் கடந்த சீசனில் புதிய கேப்டன் ருதுராஜ் தலைமையில் விளையாடிய சென்னை அணியானது லீக் சுற்றோடு வெளியேறியது.

இந்நிலையில் இன்று முதல் இது உனது தலைமையிலான சிஎஸ்கே அணி என்று சொல்லி தோனி கேப்டன்ஷிப் பொறுப்பை தம்மிடம் ஒப்படைத்ததாக ருதுராஜ் கெய்க்வாட் தெரிவித்துள்ளார். மேலும் களத்தில் அனைத்து விதமான முடிவுகளையும் நீ தான் எடுக்க வேண்டும் என்றும் தோனி கூறியதாகவும் கெய்க்வாட் கூறியுள்ளார்.

இது குறித்து கெய்க்வாட் பேசியது பின்வருமாறு: "கடந்த வருடம் ஐ.பி.எல். தொடங்குவதற்கு ஒரு வாரம் முன்பாக என்னிடம் வந்த எம்.எஸ். தோனி, 'இந்த வருடம் நான் தலைமைத் தாங்கப் போவதில்லை. நீங்கள் வழி நடத்தப் போகிறீர்கள்' என்று சொன்னார். அதற்கு அவரிடம் முதல் போட்டியில் இருந்தே நான் கேப்டனாக இருக்க வேண்டுமா? உறுதியாகத்தான் சொல்கிறீர்களா? என்று கேட்டேன். அந்த வகையில் கேப்டனாக தயாராக எனக்கு சில நாட்கள் மட்டுமே கிடைத்தது.

ஆனால் 'இது உன்னுடைய அணி. நீ உன்னுடைய சொந்தமான முடிவுகளை எடுக்க வேண்டும். பீல்டிங் செட் செய்வதில் கூட தலையிட மாட்டேன். அழுத்தமான சூழலில் உதவி செய்ய வேண்டிய நிலை வந்தால் கூட அதை நீங்கள் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை' என்று தோனி சொன்னார். அந்த அளவுக்கு அவருடைய நம்பிக்கையை நான் பெற்றது எனக்கு தெரிகிறது" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.